விரைவு நீதிமன்றம் (ந.வ), உத்தமபாளையம்

முன்னிலை: திரு.S.அமலநாத கமலக்கண்ணன், B.A.,B.L.,Hon's.,
நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம்,
உத்தமபாளையம்.

2026–ஆம் ஆண்டு மே திங்கள் 29–ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை ஆவண வழக்கு எண். 232/2025

CNR.No.TNTH080031022024

புகார்தாரர்	ல.சம்பத்குமார் (வயது 56/2026), த/பெ.லட்சுமணன், கதவு எண்.372, காளியம்மன் கோவில் தெரு, சீலையம்பட்டி, தேனி மாவட்டம். தற்போது முகவரி: முல்லை நகர், அரண்மனைப்புதூர், தேனி மாவட்டம்.
எதிரி	சு.கணேசன் (வயது 56/2026), த/பெ.சுப்பையா, கதவு எண்.116–9(3)(C6.94(3), மாரியம்மன்கோவில் தெரு, போ.மீனாட்சிபுரம், போடி தாலுகா, தேனி மாவட்டம்.
குற்றம் முறையிட்டது	மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவுகள் 138, 142–ன் கீழ்
காசோலை எண்கள். (695295) (695296)	13.06.2024
காசோலை தொகைகள்	Rs.1,00,000/–, Rs.1,00,000/–
வசூலுக்கு தாக்கல் செய்த நாள்	30.08.2024
காசோலைகள் திரும்பிய நாள்	30.08.2024
காசோலைகள் திரும்பிய காரணம்	Refer to drawer

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:25:43 +0530

அறிவிப்பு அனுப்பிய நாள்	13.09.2024
அறிவிப்பு பெறப்பட்ட நாள்	14.09.2024
வழக்கு தாக்கல் நாள்	24.10.2024
தீர்ப்பு நாள்	29.05.2026
புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர்	திரு.K.அஜ்மல்கான்
எதிரி தரப்பு வழக்கறிஞர்	திரு.G.ராம்பிரதீப்
தீர்வு	**எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து B.N.S.S பிரிவு 278(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>தீர்ப்புரை</u>

1. <u>புகார்தாரர் வழக்கு சுருக்கம்:</u>

எதிரி காளவாசல் தொழில் செய்து வருகிறார். அதன் அடிப்படையில் புகார்தாரருக்கும், எதிரிக்கும் பழக்கவழக்கம் ஏற்பட்டதால் இருவரும் நண்பர்கள் ஆனார்கள். அதன் அடிப்படையில், எதிரி அவரது குடும்ப செலவிற்காகவும், சில்லறை கடன்களை தீர்ப்பதற்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் அவசரமாக பணம் வேண்டி புகார்தாரரிடம் கடந்த 13.06.2024ம் தேதியன்று கைமாற்று கடனாக பணம் கேட்டுள்ளார். புகார்தாரர் கடந்த 13.06.2024ம் தேதி ரூ.2,00,000/–ஐ தனது வீட்டில் வைத்து எதிரிக்கு ரொக்கமாக கொடுத்துள்ளார். அதற்கு ஆதரவாக 13.06.2024 நாளிட்ட 695295 மற்றும் 695296 என்ற எண்கள் கொண்ட கனரா வங்கி, போடிநாயக்கனூர் கிளைக்குரிய ரூ.1,00,000/–, ரூ.,1,00,000/–த்திற்கான காசோலைகளை கொடுத்துள்ளார். அந்த காசோலைகளை பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி, சீலையம்பட்டி கிளையில் 30.08.2024ம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:25:50 +0530

தேதியன்று வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலைகளானது "Refer to drawer" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 30.0.8.2024 அன்று திரும்பியது. காசோலைகளுக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு 13.09.2024 நாளிட்டு அனுப்பிய சட்ட அறிவிப்பை 14.09.2024ம் தேதி எதிரி பெற்று கொண்டு, 25.09.2024ம் தேதியன்று பதில் அறிவிப்பு அனுப்பி, பணம் செலுத்தாமல் இருந்துள்ளார். மேலும் எதிரி காசோலை தொகையை செலுத்தாமல் புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142ன் கீழ் குற்றம் இழைத்துள்ளார் என்பதால் எதிரியை தண்டிக்க வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. புகார்தாரர் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலம், புகார்மனு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணைக்கு உத்தரவிட முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் எதிரிக்கு பிரிவு 227 B.N.S.S–ன் கீழ் அழைப்பாணையுடன் இணைத்து புகார் நகல் அனுப்பப்பட்டது.

3. எதிரி அழைப்பாணையையும், புகார் நகலையும் பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரியிடம் B.N.S.S பிரிவு 274–ன் படி குற்றத்தின் சாரம்சம் குறித்து கேள்வி கேட்கப்பட்டது "பொய் குற்றச்சாட்டு" என்றும், நான் காசோலையை வேறு நபரிடம் கொடுத்தேன் என்றும், அதை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், எதிரி குற்றத்தை மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

4. <u>புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

புகார்தாரர் திரு.சம்பத்குமார் தனது புகாரில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்து அது ம.சா.1 முதல் விசாரணை சாட்சியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி கொடுத்த 13.06.2024–ம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:25:56 +0530

தேதியிட்ட 695295 மற்றும் 695296 என்ற எண்கள் கொண்ட கனரா வங்கி, போடிநாயக்கனூர் கிளைக்குரிய ரூ.1,00,000/-, ரூ.1,00,000/-க்கான அசல் காசோலைகள் அசல் ம.சா.ஆ.1 என்றும், மேற்படி காசோலைகள் "Refer to drawer" என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு 30.08.2024ம் தேதியன்று திரும்பியதற்கான வங்கி குறிப்புரை அசல் ம.சா.ஆ.2 என்றும், மேற்படி காசோலைகளுக்குரிய தொகையை கேட்டு எதிரிக்கு அனுப்பிய 13.09.2024 நாளிட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் இரசீது ம.சா.ஆ.3 என்றும், மேற்படி அறிவிப்பை எதிரி 14.09.2024ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.4 என்றும், 25.09.2024 தேதியிட்டு எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு ம.சா.ஆ.5 என்று மேற்படி ஆவணங்களை முக்கிய சான்றாவணங்களாக ம.சா.1 குறியீடு செய்துள்ளார்.

5. <u>பிரிவு 351(1)(b) வினா மற்றும் பதில்:</u>

புகார்தாரர் தரப்பில் விசாரிக்க கூடுதல் சாட்சியம் இல்லை என மேற்குறிப்பு செய்ததால் புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து BNSS பிரிவு 351(1)(ஆ)-ன் கீழ் வினவிய போது புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சியம் என்றும், காசோலையை மணி என்பவரிடம்தான் கொடுத்தேன். புகார்தாரரிடம் கொடுக்கவில்லை, பொய்வழக்கு என்றும், ம.சா.ஆ.1.ஆன காசோலைகள் தன்னுடையதுதான் என்றும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையது தான் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உள்ளது என்றும் கூறினார்.

6. <u>எதிரி தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

6.1. எதிரி தரப்பில் எ.சா.1 கணேசன் தனது சாட்சியத்தில், புகார்தாரரை எனக்கு தெரியாது. S.P.வேலுமணி என்பவருக்கும், எனக்கும் வரவு செலவு உள்ளது. கடந்த 15 வருடங்களுக்கு முன்பு ரூ.3 லட்சம் கடன் S.P.மணியிடம் வாங்கினேன். அப்போது நிரப்பப்படாத காசோலை, 7 புரோநோட்டுகள், ரூ.100

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:04 +0530

பத்திரம் ஆகியவற்றை S.P.மணியிடம்தான் கொடுத்தேன். S.P.மணியிடம் நான் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டேன். காசோலையை நான் திருப்பி கேட்டபோது அவர் வீடு வெள்ளை அடிக்கும் சமயத்தில் எங்கேயோ எடுத்து வைத்துவிட்டதாகவும், தேடி தருவதாகவும் கூறினார். ஆனால் காசோலையை திருப்பி தரவில்லை. போடி காவல் நிலையத்தில் S.P.மணியின் மீது புகார் கொடுத்துள்ளேன். பின்பு S.P.மணி என்னை ஆள் வைத்து மிரட்டியதால் ரூ.3,50,000/- தருவதாக ஒப்புகொண்டு காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தேன். அவரிடம் நான் கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எதிரி மணி என்பவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான இரசீதை எ.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளார்.

7. <u>புகார்தாரர் தரப்பு வாதம்:</u>

புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், புகார்தாரர் அவரது சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதம் முன்வைத்துள்ளார். ம.சா.ஆ.1 ஆன காசோலைகளும், அதிலுள்ள கையொப்பமும் தன்னுடையதுதான் என்று எதிரி ஒப்புக்கொண்டுள்ளதால், மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் அனுமானங்கள் புகார்தாருக்கு ஆதரவாக உள்ளது. S.P.மணி என்பவர் புகார்தாரரின் உடன்பிறந்த சகோதரர் இல்லை. எதிரி தரப்பு எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை எதிரி பெற்றுகொண்டு பொய்யான சங்கதிகளை கூறி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார். புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானங்கள் எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தினை முன்வைத்தார்.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:11 +0530

8. <u>எதிரி தரப்பு வாதம்:</u>

கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், எதிரி ரூ.2,00,000/- கடனாக வாங்கவில்லை. கடந்த 15 வருடங்களுக்கு முன்பு S.P.மணி என்பவரிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக கொடுத்த தாவா காசோலைகளை வைத்து புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார். S.P.மணி என்பவர் மீது காவல் நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளார். காசோலைகளில் உள்ள கையொப்பத்தின் மையும், மற்ற எழுத்துக்கள் வேறு மையிலும் உள்ளது காசோலைகளை தவிர்த்து வேறு எந்த ஆவணங்களையும் புகார்தாரர் தாக்கல் செய்யவில்லை. காசோலைகள் தொகையை செலுத்த எதிரி கடமைப்பட்டவர் இல்லை. புகார்தாரரை எதிரிக்கு யார் என்று தெரியாது. ஆகையால் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக கூறப்படும் அனுமானங்கள் மறுக்கப்பட்டுள்ளது என்பதால் எதிரிக்கு எதிராக பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தண்டிக்க இயலாது என்ற வாதத்தை முன்வைத்தார்.

9. சான்றாவணங்கள் மற்றும் இதர வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு கருத்தில் எடுத்து கொள்ளப்பட்டது.

10. <u>இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138-ன் படி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது தீர்விற்குரிய பிரச்சனையாகும்.</u>

10.1. எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க பிரிவு 138 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் உட்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்.

- முதலில் எதிரி, புகார்தாரருக்கு 13.06.2024-ம் தேதியிட்டு தலா ரூ.1,00,000/-க்கு கொடுத்த கனரா வங்கி, போடிநாயக்கனூர் கிளைக்குரிய ம.சா.ஆ.1 காசோலைகளான (எண்ணங்கள்-2) உரிய காலத்திற்குள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:18 +0530

➢ மேற்படி காசோலைகளானது கடந்த 30.08.2024ம் தேதியன்று Refer to drawer என்ற காரணத்தினால் மதிப்பு மறுக்கப்பட்டு சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி, சீலையம்பட்டி கிளையிலிருந்து திருப்பப்பட்டது என்பது ம.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

➢ காசோலைகள் திரும்பியது குறித்து 13.09.2024–ம் தேதியன்று புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் உரிய காலத்திற்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது ம.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

➢ மேற்படி அறிவிப்பை 14.09.2024–ம் தேதியன்று எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

➢ 25.09.2024ம் தேதியன்று எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் ம.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் எதிரி 15 நாட்களுக்குள் பணம் செலுத்தாமல் இருந்ததால் உரிய காலத்திற்குள் புகார்தாரர் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

10.2. தற்போது தாவா காசோலையானது எதிரியின் காசோலைதானா? என்றும், எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க தான் புகார்தாரருக்கு தாவா காசோலையை கொடுத்தாரா? என்பதை பரிசீலனை செய்கையில், தாவா காசோலைகளானது எதிரியின் காசோலைகள்தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்று அவர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 (a)–ன்படி வழக்கு காசோலைகள் மறுபயனுக்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது. மேலும், K.Bhaskaran Vs. Sankaran Vaidhyan Balan (1999 (4) RCR (Criminal) 309) என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி, எதிரி

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:26 +0530

காசோலைகளில் உள்ள கையொப்பத்தை மறுக்கப்படவில்லை என்பதால் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 139-ன் படி காசோலைகளானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதுதான் என்று புகார்தாரருக்கு ஆதரவாக அனுமானம் நிலவுகிறது.

10.3. மேற்கண்ட அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் பட்சத்தில் எதிரி தரப்பில் மறுக்ககூடிய அனுமானங்கள் ஆகும். Basalingappa Vs mudibasappa என்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற தீர்ப்பின்படி எதிரி தனது தரப்பு சாட்சியங்களை முன் நிறுத்துவதன் மூலமாகவோ அல்லது புகார்தாரர் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தோ Pre-Ponderance of probability என்ற அடிப்படையில் தனது தரப்பிற்கு ஆதரவாக எதிர்வாதத்திற்குரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் மறுக்கலாம்.

10.4. மேற்படி அனுமானங்கள் புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் நிலையில், எதிரி தரப்பில் இருந்து மறுக்கப்படும் சங்கதிகள் யாதெனில்,

"எதிரி ரூ.2,00,000/- கைமாற்று கடன் வாங்கவில்லை என்றும், கடந்த 15 வருடங்களுக்கு முன்பு S.P.மணி என்பவரிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலைகளை வைத்து புகார்தாரர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்" என்று புகார்தாரரின் வழக்கினை மறுக்கப்பட்டுள்ளது.

10.5. புகார்தாரர் அவரது நிரூபண சாட்சியத்தில், எதிரியின் குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும், தொழில் அபிவிருத்திக்காகவும் வேண்டி புகார்தாரரிடம் கடன் பெற்றதாக கூறியுள்ளார். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி தாவா காசோலைகளை கொடுத்தார். அதனை வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தபோது பணம் வசூலாகாமல் Refer to drawer என காரணம் குறிப்பிட்டு காசோலைகளானது திருப்பப்பட்டது.

10.6. புகார்தாரரின் வழக்கை நிரூபிக்கும் வகையில், ம.சா.ஆ.1 ஆன எதிரியின் தாவா காசோலைகளை புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். தாவா காசோலைகள் வங்கியிலிருந்து மறுக்கப்பட்ட பின்னர் புகார்தாரர் எதிரிக்கு

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:33 +0530

அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுகொண்டு, எதிரி அவரது தரப்பை முன்னிலைப்படுத்தி பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

10.7. மேற்படி பதில் அறிவிப்பில் புகார்தாரரை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரரிடம் தனக்கு வரவு செலவு இல்லை என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் தாவா காசோலையானது யாரிடம் கொடுக்கப்பட்டது மற்றும் எதற்காக கொடுக்கப்பட்டது என்பதை குறித்து பதில் அறிவிப்பில் எவ்வித விளக்கமும் குறிப்பிடவில்லை.

10.8. எதிரி தானாக முன்வந்து தன்னை எ.சா.1 ஆக விசாரணை செய்துள்ளார். எதிரி அவரது சாட்சியத்தில், கடந்த 15 வருடங்களுக்கு முன்பு S.P.மணி என்பவரிடம் ரூ.3 லட்சம் வாங்கிய கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை வைத்து புகார்தாரர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், S.P.மணி மீது போடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளாதாக சாட்சியம் அளித்து மனு இரசீது எண்.578/75 என்பதை எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். ஆனால் எதிரி காவல் நிலையத்தில் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் மனுவை அவரது தரப்பில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி புகார் மனுவை பரிசீலனை செய்தால்தான் தாவா காசோலைகளை பற்றி அதில் குறிப்பிட்டுள்ளதா என்பது தெரியவரும். மேற்படி புகார் மனுவை எதிரி தாக்கல் செய்யாதபட்சத்தில், தாவா காசோலையை பொறுத்து அதில் குறிப்பிடவில்லை என்பது தெரியவருகிறது.

10.9. மேலும் S.P. மணி என்பவரிடம் எதிரி கடன் வாங்கினார் என்றும், காசோலையை கொடுத்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் அவரது தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. புகார்தாரர் அவரது சாட்சியத்தில், S.P.மணி தனக்கு தெரியும் என்றும், தனது அண்ணன் முறை ஆவார் என்று கூறியுள்ளதால் புகார்தாரர் பொய்வழக்கு தாக்கல் செய்தார் என்று எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது. ஆனால் எதிரி தரப்பு வாதத்தில், S.P.மணி என்பவர் புகார்தாரரின் உடன்பிறந்த சகோதரர் இல்லை என்று கூறப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:39 +0530

மேலும் S.P.மணி என்பவரை விசாரிக்கும்பட்சத்தில், உண்மையில் எதிரி S.P. மணியிடம் காசோலைகளை கொடுத்தாரா என்பது தெரியவரும். ஆனால் S.P. மணி என்பவரை சாட்சியாக விசாரிப்பதற்கு எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்கவில்லை.

10.10. இவ்வழக்கில், S.P.மணி என்பவரிடம்தான் எதிரி பணம் வாங்கினார் என்பதற்கு அவரது தரப்பில் எவ்வித சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யாத நிலையில், S.P.மணியை புகார்தாரருக்கு தெரியும் என்ற காரணத்தினால் மட்டுமே புகார்தாரரின் வழக்கின் மீது சந்தேகம் எழவில்லை என்று முடிவு செய்கிறது.

10.11. மேலும் காசோலையில் உள்ள கையொப்பத்தின் மையும், மற்ற எழுத்துக்கள் வேறு மையிலும் உள்ளது என்பதை புகார்தாரர் ஒப்புக்கொண்டுள்ளார் என்று எதிரி தரப்பில் வாதிக்கப்பட்டது. மேற்படி விபரங்களை புகார்தாரர் ஒப்புக்கொண்டாலும், எதிரி காசோலைகளில் எழுதி கொண்டு வந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்தார் என்று புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் எதிரி தாவா காசோலைகளை புகார்தாரரிடம் கொடுக்கவில்லை என்பதை அவரது தரப்பில் நிரூபிக்காதபட்சத்தில், காசோலைகளில் மையின் வேறுபாடுகள் உள்ளது என்ற காரணத்தினால் மட்டுமே புகார்தாரரின் வழக்கின் மீது சந்தேகம் எழுந்ததாக தீர்மானிக்க இயலாது என்று முடிவு செய்கிறது.

10.12. புகார் மனுவில், 13.06.2024ம் தேதியன்று எதிரி புகார்தாரரின் வீட்டிற்கு சென்று கடன் வாங்கியதாக கூறும் நிலையில், மேற்படி தேதியன்று எதிரி புகார்தாரரை சந்திக்கவில்லை என்றும், வேறு இடத்தில் இருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆவணங்களும், சாட்சிகளும் எதிரி தரப்பில் முன்னிறுத்தப்படவில்லை.

10.13. இவ்வழக்கில் காசோலைகள் மற்றும் அதிலுள்ள கையொப்பம் எதிரியுடையதுதான் என்ற காரணத்தினாலும், காசோலைகளை புகார்தாரரிடம்

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:46 +0530

கொடுக்கவில்லை என்று எதிரி தரப்பில் நிரூபிக்காத காரணத்தினாலும், S.P.மணி என்பவரை விசாரிக்க எதிரி தரப்பில் எவ்வித முயற்சிகளும் எடுக்காத காரணத்தினாலும், எதிரி பணம் வாங்கியதாக சொல்லப்படும் தேதியன்று புகார்தாரரை சந்திக்கவில்லை என்பதை நிரூபிக்காத காரணத்தினாலும், எதிரி தரப்பின் எதிர்வாதத்தை நிரூபிக்கும் வகையில் வேறு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை எதிரி தரப்பில் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 118(a) மற்றும் பிரிவு 139 கீழான சட்டப்படி அனுமானங்களை எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் மறுக்கப்படவில்லை என்று முடிவு செய்கிறது. எனவே எதிரி புகார்தாரரிடம் வாங்கிய சட்டப்படியான கடனுக்கு ஆதரவாக தாவா காசோலைகளை புகார்தாரரிடம் கொடுத்துள்ளார் என்றும், காசோலைகள் தொகையை எதிரி கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10.14. மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் எதிரி மீது மாற்றுமுறை ஆவணசட்டம் பிரிவு 138–ன் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவு:

முடிவாக எதிரி மீது பிரிவு 138 மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் குற்றவாளி என தீர்மானித்து இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

12.தண்டனை:

முடிவாக, எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்து, எதிரிக்கு மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழான குற்றத்திற்கு 3 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று பிரிவு 278(2)–ன் B.N.S.S கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சொத்து எதுவும் தாக்கல் இல்லை.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:53 +0530

13. <u>குவிமுச பிரிவு 357–ன் கீழ் இழப்பீடு:</u>

தாவா காசோலை தொகையை எதிரி புகார்தாரருக்கு 2 மாத காலத்திற்குள் பிரிவு 395(3) B.N.S.S–ன் கீழ் இழப்பீடாக செலுத்த வேண்டும், தொகை செலுத்த தவறினால் மேலும் கூடுதலாக எதிரி 1 மாதம் காலம் மெய்காவல் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் மே மாதம் 29–ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:26:59 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.

1. <u>புகார்தாரர் தரப்பு சாட்சி:</u>

1	ம.சா.1	திரு.சம்பத்குமார் (புகார்தாரர்)

2. <u>புகார்தாரர் தரப்பு சான்றவணங்கள்:</u>

1	ம.சா.ஆ.1	13.06.2024 நாளிட்ட 695295 மற்றும் 695296 என்ற எண்கள் கொண்ட கனரா வங்கி, போடிநாயக்கனூர் கிளைக்குரிய ரூ.2,00,000/–க்கான காசோலைகள் அசல்
2	ம.சா.ஆ.2	மேற்படி காசோலைகள் 30.08.2024 நாளிட்டு Refer to drawer என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட வங்கி குறிப்புரை அசல்
3	ம.சா.ஆ.3	13.09.2024 நாளிட்ட புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் மற்றும் இரசீது
4	ம.சா.ஆ.4	14.09.2024 நாளிட்டு அறிவிப்பினை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல்
5	ம.சா.ஆ.5	25.09.2024 நாளிட்டு எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு அசல்

3. புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்: இல்லை

4. எதிரி தரப்பு சாட்சி:

1	எ.ம.சா.1	திரு.கணேசன்

5. எதிரி தரப்பு சான்றாவணம்:

1	எ.ம.சா.ஆ.1	எதிரி S.P மணி என்பவர் மீது கொடுத்த புகார் மனு இரசீது

6. எதிரி தரப்பு சான்றுபொருள்: இல்லை

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.05.29 12:27:06 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், உத்தமபாளையம்.